# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி அறிவிப்பின்படி கழக செய்தித்துறை தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எம்.பி. மற்றும் கழக சட்டத்துறை துணை செயலாளர் இ.பரந்தாமன் ஆகியோர் கீழ்க்கண்டவாறு களஆய்வு மேற்கொள்கின்றனர்.

**அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி - 24.05.2026**

| நகரம் / ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| அரக்கோணம் நகரம் | காலை 10.00 | அன்னப்பூரணி மஹால், அரக்கோணம் |
| அரக்கோணம் கிழக்கு | | |
| தக்கோலம் பேரூர் | | |
| அரக்கோணம் மத்திய | காலை 12.00 | OTP மஹால், நாகாலம்மன் நகர் |
| அரக்கோணம் மேற்கு | | |
| நெமிலி கிழக்கு | மாலை 4.00 | கலா பாரடைஸ், நெமிலி |
| நெமிலி மத்திய | | |

**இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி - 26.05.2026**

| நகரம் / ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| வாலாஜா நகரம் | காலை 10.00 | நகர கழக அலுவலகம், வாலாஜா |
| வாலாஜா கிழக்கு | | |
| வாலாஜா மத்திய | | |
| இராணிப்பேட்டை நகரம் | காலை 12.00 | தி.மு.க மாவட்ட அலுவலகம், பாரதிநகர் |
| மேல்விஷாரம் நகரம் | | |
| வாலாஜா தெற்கு | | |
| அம்மூர் பேரூர் | | |
| ஆற்காடு மேற்கு | பிற்பகல் 3.00 | M.K.மருத்துவமனை, தாழனூர் |

**ஆற்காடு சட்டமன்றத் தொகுதி - 27.05.2026**

| நகரம் / ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| ஆற்காடு நகரம் | காலை 10.00 | ஆற்காடு |
| ஆற்காடு கிழக்கு | காலை 11.00 | முப்பதுவெட்டி |
| திமிரி கிழக்கு | பிற்பகல் 1.00 | குப்புடிசாத்தம் |
| கலவை பேரூர் | | |
| திமிரி பேரூர் | பிற்பகல் 3.00 | K.B.J.மஹால், திமிரி |
| விளாப்பாக்கம் பேரூர் | | |
| திமிரி மத்திய | மாலை 4.00 | மத்திய ஒன்றிய கழக அலுவலகம், திமிரி |
| திமிரி மேற்கு | | |
| கணியம்பாடி | மாலை 5.00 | கணியம்பாடி |
| வேலூர் மாநகரம் | | |

**சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி - 25.05.2026**

| நகரம் / ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| சோளிங்கர் நகரம் | காலை 10.00 | MSV மஹால், சோளிங்கர் |
| சோளிங்கர் வடக்கு | | |
| சோளிங்கர் மேற்கு | | |
| சோளிங்கர் மத்திய | | |
| காவேரிபாக்கம் தெற்கு | காலை 12.00 | வன்னியசத்திரம், காவேரிப்பாக்கம் |
| காவேரிபாக்கம் வடக்கு | | |
| காவேரிபாக்கம் பேரூர் | | |
| நெமிலி தெற்கு | மாலை 3.00 | வெங்கடேச பெருமாள் பார்ட்டி ஹால், ரெட்டிவலம் |
| நெமிலி வடக்கு | | |
| பனபாக்கம் பேரூர் | | |
| நெமிலி பேரூர் | | |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
19.05.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 153 வது வட்டம், போரூரில் தனியாருக்கு சொந்தமான டோர் நீட்ஸ் என்னும் மரக்கடை குடோனில் தீ விபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்ததும் மதுரவாயல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி தீ மேலும் பரவாமல் இருக்க தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்து குடியிருப்பு பகுதிக்கு மேலும் பரவாமல் துரித நடவெடிக்கை எடுத்தார். பகுதி நிர்வாகி பி.எம்.செல்வராஜ், வட்டச் செயலாளர் தி.சார்லஸ், வட்ட நிர்வாகிகள் க.நடராஜன், முரளிகிரிஷ்ணன், பால்ரவி, சுகுமார், பழனி, பன்னீர், கோவர்தணன், சந்தோஷ், மார்கபந்து, சசிகுமார், செங்குட்டுவன், வீரன், மோகன் உடனிருந்தனர்.

சாலையில் சுற்றித் திரியும்

## தெருநாய்களை அகற்ற வேண்டும்! உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

புதுடெல்லி, மே 20–

சாலைகளில் சுற்றித்திரியும் தெருநாய்கள் பொதுமக்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகிறது. இதுதொடர்பாக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், நாய்களை பிடித்து அதற்கென உருவாக்கப்பட்டுள்ள காப்பகங்களில் அடைக்க வேண்டும் என்று ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், இன்று தீர்ப்பு வழங்கியது. அதில், சாலைகளில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து அகற்ற வேண்டும் என்ற உத்தரவுக்கு தடை விதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் திட்டவட்ட மாக தெரிவித்துள்ளது. விலங்குகள் நல வாரிய விதிமுறைகள் உரிய முறையில் செயல்படுத்தப்பட வில்லை என்று உச்சநீதிமன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது. கருத்தடை மற்றும் தடுப்பூசி விதிமுறைகளை முறையாக ஒன்றிய, மாநில அரசுகள் செயல்படுத்த வில்லை என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாகவே நாய்களால் தற்போது பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. தெருநாய்களால் பொதுமக்களுக்கு ஆபத்து அதிகமாகியுள்ளது. நாய்கள் கடிக்கும் புகார்கள் அதிகரித்துள்ளன. நாய் கடிகளால் சிறுவர், சிறுமியர் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். விமான நிலையங்களில் கூட நாய்கள் கடிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே பொது இடங்களில் உள்ள நாய்களை பிடித்து அகற்ற வேண்டும் என்ற உத்தரவுக்கு தடை விதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் திட்டவட்ட மாக தெரிவித்துள்ளது. நாய்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் ஆபத்தை தடுக்க வேண்டும். நாய்களுக்கு உரிய தடுப்பூசி போட வேண்டும். நாய்களை பிடித்து மறுவாழ்வு மையங்களில் அடைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் விலங்குகள் நல மையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சட்டமன்றத் தொகுதி-கள ஆய்வு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்டச் செயலாளர் தரணிவேந்தன் எம்.பி., அறிக்கையின் படி சட்டமன்றத் தொகுதிகள் தோறும் தேர்தல் முடிவு கள ஆய்வுக்குழுக் கூட்டம் ஜி.செல்வம் எம்.பி., முத்துவேல் ராமசாமி ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

| சட்டமன்ற தொகுதி | நாள் | இடம் |
|---|---|---|
| வந்தவாசி | 30.05.2026 சனி | வந்தவாசி தொகுதி M. துரை மஹால் மேல்மருவத்தூர் சாலை வந்தவாசி |
| போளூர் | 31.05.2026 ஞாயிறு | போளூர் தொகுதி ராணி மகால், அண்ணா சிலை அருகில், போளூர் |
| செய்யாறு | 01.06.2026 திங்கள் | செய்யார் தொகுதி KVM மஹால் பைபாஸ் சாலை ,செய்யார் |
| ஆரணி | 02.06.2026 செவ்வாய் | ஆரணி தொகுதி நெல்லரிசி வியாபாரி சங்க மண்டபம் வேலூர் சாலை , ஆரணி |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 20.05.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தே.மதியழகன் அறிக்கையின் படி ஊத்தங்கரை, பர்கூர், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிகளில் கள ஆய்வுக்குழுக் கூட்டம் **சி.என்.அண்ணாதுரை எம்.பி.**, **திருமதி ரத்னா லோகேஸ்வரன்** ஆகியோர் தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளது.

| வ.எண் | சட்டமன்றத் தொகுதி | நாள் | இடம் |
|---|---|---|---|
| 1. | ஊத்தங்கரை | 25.05.2026 திங்கட்கிழமை | நாயுடு மஹால் கிருஷ்ணகிரி மெயின் ரோடு, ஊத்தங்கரை |
| 2. | பர்கூர் | 26.05.2026 செவ்வாய்க்கிழமை | டி.ஆர்.திருமண மண்டபம், பர்கூர் |
| 3 | கிருஷ்ணகிரி | 27.05.2026 புதன் கிழமை | எம்.ஜி.எம். மஹால் அவதானப்பட்டி, கிருஷ்ணகிரி |


**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 19.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மைனர் மோசஸ்

## மே 20 (1993)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு தீவிர அரசியலில் ஈடுபட்டு சென்னை நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.**

**சென்னை மாநகர மேயர் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“சிரித்த முகம் – செம்மாந்த நோக்கு – சிங்கத்தின் நடை – உடையணிந்து காட்சி தந்தால் ஒரு ராஜகம்பீரம் – இத்தனைக்கும் மேலாக உள்ளமோ கள்ளமொன்றில்லாத் தூய்மையின் இருப்பிடம்! தும்பை மலர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கல் உரையில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஆ.மணி எம்.பி. தலைமையில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

தருமபுரி, மே 20 -

தருமபுரி கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. தலைமையில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் ஜூன் 3 ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது, நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு செய்ய வரும் குழு வருகை, மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

கூட்டத்தில் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தருமச்செல்வன், அவைத்தலைவர் செல்வராஜ், நகர செயலாளர்கள் நாட்டான். மாது, எம்பி.கௌதம், முல்லை ரவி, மாநில நிர்வாகிகள் இரா.தாமரைச்செல்வன், செந்தில்குமார், மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ஆறுமுகம். உமாசங்கர், ரேணுகாதேவி, அரூர் கழக வேட்பாளர் சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் டி.எல்.காவேரி, ஏ.எஸ்.சண்முகம்,என்.பி.பெரியண்ணன், என்.செல்வராஜ், சந்திரமோகன், சௌந்தரராசு, ரத்தினவேல், செங்கண்ணன், வீரமணி, பச்சியப்பன், மல்லமுத்து, கருணாநிதி, கிருஷ்ணன், வேடம்மாள், வைகுந்தம், எச்சனஹள்ளி சண்முகம், கே.எஸ்.ஆர். சேட்டு, வீரமணி, சூர்யா தனபால்,பிரகாஷ், வ.முல்லை வேந்தன், சுருளிராஜன், ராஜா, வழக்கறிஞர் அசோக்குமார், கே.ஆர்.சி.செல்வராஜ், கலைச்செல்வன், ஹரிவிக்னேஷ், முரளி, உஷா ராஜேந்திரன், என்.தேவராஜ், முத்துலக்ஷ்மி, ஐ.டி. விங் உதயசூரியன், ஜெ. ராஜேஷ், தமிழ மூகன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

## எபோலா வைரஸ் பரவல்! பலி எண்ணிக்கை 131 ஆக உயர்வு!

ஆப்ரிக்கா, மே 20 -

ஆப்ரிக்க நாடான காங்கோவில் எபோலா வைரஸ் பரவல் காரணமாக பலியானோர் எண்ணிக்கை 131 ஆக உயர்ந்துள்ளது.

கிழக்கு காங்கோ பகுதியில் அரியவகை எபோலா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருகிறது. இந்த பாதிப்பால் இதுவரை 131 பேர் பலியான நிலையில் 500க்கும் மேற்பட்டோர் வைரஸ் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி, காங்கோ சுகாதாரத் துறை அமைச்சர் சாமுவேல் ரோஜர் கம்பா கூறுகையில், “513 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வருகின்றனர். 131 பேர் தற்போது வரை பலியான நிலையில் அனைவரும் வைரஸ் தொற்று காரணமாக பலியாகியுள்ளனரா என்ற விசாரணை நடைபெற்று வருகின்றது” என்றார்.

உலக சுகாதார அமைப்பு மே 17 அன்று எபோலா வைரஸ் பரவலை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பொது சுகாதார அவசரநிலையாக அறிவித்தது.

தற்போதைய தொற்றுப் பரவல் மே 15 அன்று முதன் முதலாக கண்டறியப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறைகளோ தடுப்பூசிகளோ இல்லாத எபோலா நோயின் அரிய வகை பண்டிபுக்யோ வைரஸால் இந்த பாதிப்பு ஏற்படுவதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இரா. தில்லைவில்லாளன்

## மே 20 (2008)



**திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர். திராவிட நாடு இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.**

**அண்ணாவின் ‘சந்திரோதயம்’, ‘சந்திரமோகன்’, ‘நீதிதேவன் மயக்கம்’ ஆகிய நாடகங்களில் அண்ணாவுடன் இணைந்து நடித்தவர்.**

**நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.**

**மும்முனைப் போராட்டத்தின் போது கைதாகி சிறை சென்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள், 1948ல் முரசொலி வார இதழில் இவரைத் தொடர்ந்து சிறுகதை, கட்டுரைகளை எழுத வைத்தார். தலைவர் கலைஞர் அவர்களிடம் தனிப்பாசம் கொண்டிருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**